முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

O.S.No.170/2013

Witness PW 1

பெயர்: பத்மினி

க/பெ.: வீரப்பன்

இன்று (25/06/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

சத்தியமாக சொல்கிறேன்.

1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

2ம் வாதி ராணி என்பவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் இல்லை அனைத்து வாதிகளுக்காகவும் தான் நான் சாட்சியாக என்னை விசாரிக்கிறேன். 3ம் வாதி வெற்றிச்செல்வி எனக்கு என்ன உறவு என்றால் எனது அக்கா மகள். 3ம் வாதி என்ன ஆவணம் எழுதியுள்ளார் என்றால் 3ம் வாதி வெற்றிச்செல்வி அவரது பங்கை அவரது அக்கா ராணிக்கு கொடுக்க வேண்டுமென்று உயில் எழுதி உள்ளார். உயில் பற்றி எனக்கு நேரயாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. அந்த உயில் சம்மந்தமாக ராணிக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். அந்த உயிலில் யார் சாட்சியாக உள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, ராணிக்குத் தான் தெரியும். வெற்றிச்செல்வி என்பவர் திருமணம் ஆனவர் என்றால் சரிதான். அவரை யாருக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சிறுவந்தாடு கலியபெருமாள் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள். ராணிக்கும், கலியபெருமாளுக்கும் இடையே பாண்டிச்சேரியில் உயில் சம்மந்தமாக வழக்கு உள்ளது தெரியுமா என்றால் தெரியாது. கண்டமங்கலம் சொத்தில் கலைமகள் கல்வி அறக்கட்டளை நடந்ததா என்றால் அது எனக்கு தெரியாது. விழுப்புரம் மாவட்ட உரிமையியில் நீதிமன்றத்தில் 367/12 என்ற எண்ணில் கலைமகள் அறக்கட்டளை சார்பாக இந்த வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் மற்றும் மல்லிகா ஆகியோர்கள் பெயரில் வழக்கு உள்ளது தெரியுமா என்றால் தெரியாது. நான் வாக்குமூலத்தில் சொல்லியுள்ள உயிலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ராணியும் வசந்தகுமாரும் சேர்ந்து தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு சொத்தை ராஜ்மோகன் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல பொதுவாகத்தான் அனுபவித்து வந்தோம். ராஜ்மோகன் தனிப்பட்ட முறையில் அனுபவித்து அதனை விற்றுவிட்டார் என்றால் சரியல்ல. எனக்கு கண்டமங்கலம் சென்ரல் பேங்க் ஆப் இன்டியாவில் எனக்கு வங்கி கணக்கு உள்ளதா எனறால் எனது கணவரை கேட்டால் தான் தெரியும். 16.5.1996ல் செண்பகம் பெயருக்கு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்து ரு.2,50,000/- பெற்றுக்கொண்டு கண்டமங்கலம் சென்ரல் பேங்க் ஆப் இன்டியாவில் வைப்பீடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

x

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

Principal Subordinate Judge ,
Villupuram